**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு**

*************

## <u>கொவிட் நெருக்கடியை இந்தியா எவ்வாறு எதிர்கொள்கிறது?</u>

1.3 பில்லியன் சனத்தொகை உள்ள நாடொன்றுக்கு கொவிட் நெருக்கடியை எதிர்கொள்ள மகத்தான முயற்சிகள் தேவை. ஏப்ரல் 16 ஆம் திகதி வரை 12380 உறுதிப்படுத்தப்பட்ட நோயாளர்கள் பதிவாகியிருக்கும் நிலையில் 414 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தியா தனது ஊரடங்கினை மே மூன்றாம் திகதி வரை நீடிப்பதாக அண்மையில் அறிவித்திருந்தது. ஆனால் கைத்தொழில், விவசாயம் மற்றும் அவற்றுடன் இணைந்த சேவைகள் ஏப்ரல் 20ஆம் திகதிக்கு பின்னர் பகுதி பகுதியாக இயங்குவதற்கு இடமளிக்கப்படவுள்ளது.

மார்ச் 25ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டிருக்கும் ஊரடங்கு முறைமையை இந்தியா முன்னொருபோதும் எதிர்கொண்டிருக்கவில்லை. குறிப்பாக பயணிகள் புகையிரத சேவைகள் முற்றுமுழுதாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் இந்தியா குடியரசாக மாற்றம் பெற்ற பின்னர் முதற்தடவையாக புகையிரத சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் முன்கூட்டியே மேற்கொள்ளப்பட்ட உறுதியான செயற்பாடுகள் காரணமாக இந்தியா தனது உட்கட்டமைப்பு வசதிகளை தயார் நிலையில் வைத்திருப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தது. கொவிட் நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்காக 500 பிரத்தியேக மருத்துவமனைகள் மற்றும் 5000 மேலதிக சுகாதார நிலையங்கள் தயார் செய்யப்பட்டன. இந்திய புகையிரத துறை ரயில் பெட்டிகளை 40,000 தனிமைப்படுத்தப்பட்ட கட்டில்களாக மாற்றி ஆக்கபூர்வமான தந்திரோபாயத்தை முன்வைத்திருந்தது.

ஊரடங்கு முறைமையானது சாத்தியமான பெறுபேறுகளை வழங்கியிருந்தமை மிகவும் முக்கியமான விடயமாகும். ஊரடங்கு அல்லது சமூக இடைவெளி பேணப்படாது விட்டிருந்தால் ஏப்ரல் 15ம் திகதி அளவில் இந்தியாவில் 820000 நோயாளர்கள் பதிவாகியிருப்பார்கள். ஆனால் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக அந்த எண்ணிக்கை தற்போது 12000 ஆக மட்டுப்படுத்தப்பட்டது. மிகவும் முக்கியமாக இந்த நோய்த்தொற்று பாரியளவில் உள்ளூரை சேர்ந்தவர்கள் மத்தியிலேயே காணப்படுகின்றன.

ஆனால் கொவிட் நோயின் பாதிப்புகளை கட்டுப்படுத்துவதற்காக இந்தியா முன்னெடுத்திருந்த பல செயற்பாடுகளில் ஊரடங்கு முறைமையும் ஒன்றாக காணப்படுகிறது.

இந்தியாவில் முதலாவது நோயாளர் அடையாளம் காணப்படுவதற்கு 13 நாட்கள் முன்னதாக அதாவது ஜனவரி 17ஆம் திகதி முதல் ஒரு தற்காப்பு நடவடிக்கையாக இந்தியா விமானசேவை கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது. அதனைத்தொடர்ந்து பயணிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் பயணக் கட்டுப்பாடுகள் ஆகியவை அமுல்படுத்தப்பட்டு தொடர்ந்து சர்வதேச விமான சேவைகள் முழுமையாக நிறுத்தப்பட்டன. முன்கூட்டியே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பயனாக இந்தியாவில் முதலாம் கட்ட நோய்த்தொற்று ஏற்படுவதற்கு முன்னதாக இந்த நோயினை எதிர்கொள்ள இந்தியா, தன்னை தயார் படுத்திக் கொள்வதற்கு சரியான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. சர்வதேச அமைப்புக்களான உலக சுகாதார நிறுவனம் மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவை இந்தியாவின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பாராட்டி அங்கீகரித்திருந்தன.

ஊரடங்கு காலப்பகுதியில் இந்திய அரசாங்கமும் கைத்தொழில் துறையினரும் அத்தியாவசியமான மருத்துவ உபகரணங்களை குறிப்பாக PPE தொகுதிகள், செயற்கை சுவாசக் கருவிகள் மற்றும் சோதனை கருவிகள் போன்றவற்றின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை துரிதப்படுத்தி இருந்தன. குறிப்பாக துரிதகதியில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்கான மிகவும் சிறந்த வழிமுறையாக நிரூபிக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஜனவரியில் ஒரு மருத்துவ ஆய்வு கூடம் மாத்திரம் காணப்பட்ட நிலையில் தற்பொழுது 223 அதிகரிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் உள்ள பாரிய மருத்துவ பொருட்கள் உற்பத்தியாளர்களுள் ஒன்றான இந்தியா உலகளவில் மருத்துவ பொருட்களுக்கு ஏற்பட்டிருந்த தேவையினை தனது உற்பத்திகள் மூலம் நிவர்த்தி செய்வதற்கும் தன்னை தயார் படுத்தியிருந்தது. குறிப்பாக இந்தியாவில் கிராமப்புறங்களில் உள்ள பெண்கள் சுய உதவி குழுக்கள் முகக் கவசங்கள் தொற்று நீக்கிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை உற்பத்தி செய்வதன் மூலம் அந்த சவாலை எதிர்கொள்வதற்கு முன் வந்திருந்தார்கள்.

ஆனால் இந்த சுய-ஊரடங்கு முறைமையானது மிகவும் இலகுவான விடயமும் அல்ல அதேபோல சமூக பொருளாதார பாதிப்புக்களையும் அது தோற்றுவித்திருந்தது. அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு மத்தியில் நகரங்களிலிருந்து பின்னோக்கிய, குறிப்பாக வடக்கு மற்றும் மேற்கு இந்தியாவில் சில பகுதிகளில் குடியகல்வுகளை தடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. ஊரடங்கு முறைமை அமுல்படுத்தப்பட்ட காலப்பகுதியிலிருந்து சில நாட்களின் பின்னர் இது ஆரம்பமாகியிருந்தது. இந்த குடியகல்வினை முறியடிப்பதற்காக இந்திய அரசாங்கம் மிகவும் துரித கதியில் தற்காலிக புகலிடங்கள் உணவு முகாம்கள் ஆகியவற்றை அமைத்திருந்தது. அதன் மூலமாக அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தொழில் துறையினரின் ஆதரவுடன் 1.25 மில்லியன் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு ஏதுவாக அமைந்தது.

மற்றொரு சவாலாக பொருளாதார ரீதியில் நலிவடைந்த பகுதிகளில் பொருளாதார பாதிப்புக்களை கட்டுப்படுத்த வேண்டிய தேவையும் ஏற்பட்டிருந்தது. இவ்விடயத்தில் தனது வங்கி வலையமைப்பு மற்றும் இணைய பொறிமுறைகள் ஆகியவற்றின் மூலமான நேரடி பணப் பரிமாற்றங்களை மேற்கொண்டு தேவைப்படுவோருக்கு பணத்தினை அனுப்புவதற்கான வாய்ப்புக்களை இந்தியா ஏற்படுத்தியிருந்தது. , விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் உள்ளிட்ட ஏழைகள் மற்றும் நலிவடைந்த தரப்பினரிற்கு உதவுவதற்காக 22 பில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 220,000 சுகாதார பராமரிப்பு பணியாளர்களுக்கு அவர்களின் அபாய நிலையை குறைத்துக் கொள்வதற்காக பிரத்தியேக காப்புறுதி திட்டம் ஒன்றும் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

நாட்டில் ஊரடங்கு அமுலில் இருக்கும் இக்காலப்பகுதியிலும் இந்தியாவின் அயலவர்களுக்கான அத்தியாவசிய சேவைகளான மின் விநியோகம், நீர், உணவு உற்பத்திகள், மின்வலு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விநியோகம், வங்கி சேவைகள் ஆகியவற்றினை பிராந்திய மற்றும் மத்திய அரசுகள் தொடர்ச்சியாக முன்னெடுத்திருந்தன. 80 மில்லியன் ஏழை மக்களுக்காக எல்பிஜி (சமையல் எரிவாயு) சிலிண்டர்கள் இலவசமாக வழங்கப்பட்ட அதேவேளை கிட்டத்தட்ட 800 மில்லியன் மக்களுக்கு தேவையான உணவு நிவாரணங்கள் மூன்று மாத காலப்பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்திய மக்கள் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் ஊரடங்கு முறைமைக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்கியிருந்தார்கள். அதேவேளை சுகாதாரப் பணியாளர்களுக்கு நன்றிகூறவும், நம்பிக்கை ஒளி ஏற்றல், மற்றும் கொவிட் 19 சவால்களை எதிர்கொள்வதற்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட அவசர சூழ்நிலைக்கான பிரதமரின் பிரஜைகள் உதவி மற்றும் நிவாரண திட்டத்துக்கான அன்பளிப்புகள் ஆகியவற்றுக்காக பிரதமர் நரேந்திர மோடியால் முன் வைக்கப்பட்டிருந்த அழைப்புக்கு மிகவும் ஆரோக்கியமானதும் பரந்தளவிலானதுமான ஆதரவு கிடைக்கப் பெற்றிருந்தது.

கொவிட் நோயானது பிரபஞ்ச ரீதியிலான ஒரு சவாலாக கருதப்பட்ட நிலையில் சகலதுக்குமான ஒற்றை தீர்வு காணப்படாத சூழலில் மத்திய மற்றும் உள்ளூர் அரசாங்கங்கள் கள நிலைமையை அடிப்படையாகக்கொண்ட பதில் நடவடிக்கைகளை திட்டமிட்டு நிறைவேற்றுவதில் முக்கிய பங்கு வகித்திருந்தன. அபரிமிதமான ஒத்துழைப்பு மற்றும் மிகவும் துல்லியமான ஆளுமை ஆகியவற்றின் ஊடாக கேரளா, ராஜஸ்தானின் பில்வாரா, ஜம்மு-காஷ்மீரின் ஸ்ரீநகர் ஆகிய பிராந்தியங்கள் நோய் தொற்றினை முடக்கும் மிகவும் வினைத்திறன் மிக்க மாதிரிகளாக மாற்றம் பெற்றிருந்தன

அத்துடன் தொடர்புகளை இலகுவில் அடையாளம் காண்பதற்காக இந்தியா மிகவும் வினைத்திறன் மிக்க முறைகளை அறிமுகம் செய்திருந்தது. 'ஆரோக்கிய சேது" (Aarogya Setu) என்னும் செயலி கையடக்கத் தொலைபேசிகள் மூலம் அமைவிடங்கள் குறித்த தகவல்களை பெற்று அச்செயலியின் பயனர்களுக்கு அவர்கள் கொவிட் - 19 நோய்தொற்று உள்ளவர்களுக்கு அருகில் இருப்பதனை அறிவிக்கும் ஆற்றலை கொண்டிருந்தது. ஏப்ரல் முற்பகுதியில் அறிமுகம் செய்யப்பட்ட இந்த செயலியானது 10 மில்லியன் பாவனையாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஊரடங்கு வேளைகளில் யோகாசனம் மற்றும் ஆயுள்வேதம் மூலமாக மக்கள் ஆரோக்கியமாக இருப்பதற்கும் உடல் ஆரோக்கிய கட்டமைப்பில் அழுத்தத்தினை குறைத்து ஏனைய சிறு நோய்களுக்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியினை மேம்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கொவிட் நெருக்கடியை கையாளுவதற்கான இந்தியாவின் முயற்சிகள் சொந்த நாட்டில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மார்ச் 15ஆம் திகதி வீடியோ கன்பரன்ஸ் முறைமை மூலமாக நடப்பட்டிருந்த சார்க் நாடுகளின் தலைவர்களின் அதி விசேட மாநாட்டில் பிரதமர் மோடி சுகாதாரத்துறைக்கான ஆதரவுக்காக 10 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட பல செயல்திட்டங்களை முன்மொழிந்திருந்தார். அதனைத் தொடர்ந்து இந்த நிதியத்திற்கு இரண்டாவது உயர் பங்களிப்பாக 5 மில்லியன் அமெரிக்க டொலரினை இலங்கை ஒதுக்கீடு செய்திருந்தது. தொடர்ந்து பாகிஸ்தான் 03 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் பங்களாதேஷ் 1.5 மில்லியன் அமெரிக்க டொலரையும் நேபாளம் மற்றும் ஆப்கானிஸ்தான் தலா ஒரு மில்லியன் அமெரிக்க டொலரினையும் மாலைதீவு 200,000 அமெரிக்க டொலரையும் ஒதுக்கீடு செய்திருந்த நிலையில் பூட்டான் ஒரு லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக அறிவித்திருந்தது. இதன் தொடர்ச்சியாக நோயின் பாதிப்புக்கு எதிரான போராட்டங்களில் ஒன்றிணைந்து செயற்படுவதற்காக மார்ச் 26ஆம் திகதி சார்க் நாடுகளின் சுகாதார நிபுணர்கள் மத்தியிலான கலந்துரையாடலும் அதனை தொடர்ந்து 2020 ஏப்ரல் 8 ஆம் திகதி சிரேஷ்ட வர்த்தக நிபுணர்களின் சந்திப்பும் வீடியோ கன்பரன்ஸ் மூலமாக நடைபெற்றது.

உள்நாட்டில் காணப்பட்டிருந்த கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் உலகளாவிய ரீதியில் 100க்கும் அதிகமான நாடுகளுக்கு மருத்துவ பொருட்கள் மற்றும் ஏனைய உதவிகள் இந்தியாவால் வழங்கப்பட்டிருந்தது. ஏப்ரல் 07 மற்றும் 08 ஆம் திகதிகளில் இரண்டு தொகுதி உயிர்காக்கும் மருத்துப் பொருட்கள் இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்டன.

****************

கொழும்பு
16 ஏப்ரல் 2020